


மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மேலூரில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் ஆட்சி நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி., சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், கரு.தியாகராஜன், முகமது யாசின், சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், புதூர் சேகர், தொகுதி பொறுப்பாளர்கள் பெருநாழி போஸ், சம்பத், ஆனந்த், அக்ரி கணேசன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

## குடிநீர் வாரிய அடையாறு மண்டல அலுவலகம் இட மாற்றம் !

சென்னை, மார்ச் 6–

சென்னை குடிநீர் வாரியம், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட பணிமனை அலுவலகம்178, தற்போது இந்திரா நகர் 2வது அவின்யு, சென்னை600 020 என்ற முகவரியில் இயங்கி வருகிறது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) இந்திரா நகர் இரயில் நிலையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் இப்பணிமனை அலுவலகம் 06.03.2024 (புதன் கிழமை) முதல் புதிய முகவரியான தரமணி கழிவுநீர் உந்து நிலையம், பீலியம்மன் கோயில் தெரு, தரமணி, சென்னை–113 என்ற இடத்தில் செயல்படும்.

எனவே, பொதுமக்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தப்பட்ட புகார்கள் மற்றும் குடிநீர் வரி / கட்டணம் செலுத்தவும் மேற்கண்ட புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி எண்கள்

உதவிப் பொறியாளர் – 8144930178

துணை பகுதிப் பொறியாளர் – 8144930239

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.



தமிழ்நாட்டில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று முன்தினம் (4.3.2024) சென்னை விமான நிலையத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பொன்னாடை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘இந்தியா’ கூட்டணி வெல்வது உறுதி!

# மோடியின் பொய், பித்தலாட்ட, மக்கள் விரோதச் செயல் விரைவில் அம்பலமாகும்!

### தமிழ்நாடு காங்கிரஸ் எஸ்.சி. - எஸ்.டி. பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் அறிக்கை!

*சென்னை, மார்ச் 6-*

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., எஸ்.டி., பிரிவு தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் முயற்சியில் இந்தியா கூட்டணி கட்டமைக்கப்பட்டது. அப்போதிலிருந்து திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்றாலே பிரதமர் மோடிக்கு கை, கால் எல்லாம் உதறல் எடுக்கத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் எந்த மூலைக்குச் சென்றாலும் ஸ்டாலின்தான் அவரது முதல் குறியாக இருக்கிறது. அந்த அளவுக்கு மோடியின் கண்களில் பயத்தைக் காட்டியிருக்கிறார் நமது திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

வட மாநிலங்களில் சமீபகாலமாக மோடிக்கும் பா.ஜ.க.வுக்கும் எதிராக இளைஞர்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த பத்தாண்டு கால மோடியின் கொடுங்கோல் ஆட்சியால் அனைத்துத் தரப்பினரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பெரும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிறார்கள். ஏழைகள் பரம ஏழைகளாகிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை வட இந்திய மக்களும் உணரத் தொடங்கிவிட்டார்கள். வாக்குப் பதிவு இயந்திரத்தில் முறைகேடு செய்தாவது ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் தான் 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பா.ஜ.க.வினர் சொல்லிக் கொண்டு திரிகிறார்கள்.

வட இந்தியாவில் பருப்பு வேகாமல் போனால் என்ன செய்வது? என்ற பயத்தில் தான் தமிழ்நாட்டில் ஓட்டுக்களைப் பொறுக்க முடியுமா நோக்கில் தொடர்ந்து இங்கு வந்து கொண்டிருக்கிறார் மோடி. 3 சதவிகித வாக்குகள் கூட இல்லாத பா.ஜ.கவுக்கு. 18 சதவிகித வாக்குகள் இருப்பதாக சொல்லி ஊடகங்களும் ஊதுகுழலாக மாறியிருக்கின்றன.

சென்னையில் நேற்று முன்தினம் நடந்த பா.ஜ.க. கூட்டத்தில் பேசிய மோடி, ஆதாரமில்லாமல் ஏதோ வழிப்போக்கர் போல பொத்தாம் பொதுவாக தி.மு.க. மீது சேற்றை வாரி இறைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

பா.ஜ.க. தொடங்குவதற்கு முன்பே ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்த கட்சி தி.மு.க. ஆட்சியில் அமர்ந்தது முதல் சமூக நீதியை நிலைநாட்டும் அரசாக செயல்பட்டு வருகிறது.

காற்று, தண்ணீர், உணவு, உடை, உறைவிடம், மொழி, மருத்துவம், கல்வி, பாதுகாப்பு, சாலை வசதி, மின்சாரம், போக்குவரத்து, உள்கட்டமைப்பு, தொழிற்சாலை, தொலைத்தொடர்பு என ஒவ்வொன்றிலும் தி.மு.க. தடம் பதித்திருக்கின்றது.

காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரியும். அதே போல் தேர்தல் நன்கொடை பத்திரம் என்ற மெகா ஊழலில் ஈடுபட்டு உச்ச நீதிமன்றத்தில் குட்டுப்பட்ட மோடி, இன்றைக்கு ஆதாரமே இல்லாமல் தி.மு.க. மீது ஆதாரமற்ற ஊழல் புகாரைச் சொல்லியிருக்கிறார்.

சென்னை வெள்ளத்தைப் பற்றி உருகியிருக்கிறார். ஆடு நனையுதே என்று ஓநாய் அழுத கதை தான் நினைவுக்கு வருகிறது. சென்னை பெரு வெள்ளத்திலிருந்து மக்களை ஓரிரு நாட்களில் அதிரடி நடவடிக்கைகள் மூலம் மீட்டு எடுத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் வடிகால் திட்டப் பணிகளுமே அதற்குக் காரணம்.

இதற்காக மக்கள் அவரை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதுவரை முதலமைச்சர் கேட்ட பேரிடர் நிவாரணத் தொகையில் சல்லிக்காசு கூட தராமல் தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் ஏமாற்றி வருகிறார் மோடி. இந்த லட்சணத்தில் பேரிடரை சிறப்பாக கையாண்டு சொந்த நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண உதவி வழங்கிய முதலமைச்சரை குறை கூற மோடிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

ஒன்றிய அரசின் திட்டம் என்பது இந்தியாவுக்கானது. இதில் காப்பியடிக்க என்ன இருக்கிறது. கலைஞர் கொண்டு வந்த பெண்களுக்கு சொத்தில் உரிமை, நிலச்சீர்திருத்தம் ஆகிய திட்டங்களை காங்கிரஸ் ஒன்றியத்தில் ஆண்ட போது செயல்படுத்தியது. இந்தியாவுக்கே முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருவது தி.மு.க.தான்.

மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண் திட்டம், விடியல் பயணம் போன்ற சுயச்சார்பு திட்டங்களை பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள் உள்ளிட்ட நாட்டின் பல மாநிலங்கள் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இது திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த வெற்றி. இந்த நிலையில் ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஸ்டிக்கர் ஒட்டுவதாகக் கூறுவது உச்சக்கட்ட நகைச்சுவையாகும்.

**நாடே வெட்கப் படுகிறது!**

தமிழ்நாட்டில் போதைப் பொருள் அதிகமாக இருக்கிறதாம். போதைப் பொருளின் தலைநகரம் என்று இன்றைக்கு அழைக்கப்படும் மாநிலம் குஜராத். அங்கு போதை சாம்ராஜ்யத்தை உருவாக்கியதில் 5 முறை முதலமைச்சராக இருந்த மோடிக்கு நிச்சயம் பங்களிப்பு உண்டு. அங்கிருந்து தான் மற்ற மாநிலங்களுக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த உண்மையை மறைத்துவிட்டு பொய்யை மட்டும் பேசும் ஒருவரை பிரதமராகப் பெற்றதற்கு நாடே வெட்கப்படுகிறது.

மோடி அவர்களே, இந்தியா கூட்டணி வெல்வது உறுதி. ரபேல் விமான பேர ஊழல் முதல் நீங்கள் செய்த அனைத்து ஊழல்களும் அம்பலத்துக்கு வரும். அன்றைய தினம் நீங்கள் அடித்த கொள்ளையும் உங்கள் பினாமி தொழிலதிபர்கள் அடித்த கொள்ளையும் வெளிச்சத்துக்கு வரும். உங்கள் தலைமையில் இந்தியாவில் சுரண்டிய வளங்களை எல்லாம் மீட்டு மீண்டும் நாட்டுக்கே ஒப்படைப்போம். இதனை காங்கிரஸ், தி.மு.க பங்கேற்றுள்ள இந்தியா கூட்டணி செய்து காட்டும். அன்றைய தினம் மோடியின் பொய், பித்தலாட்ட, மக்கள் விரோதச் செயல் அம்பலமாகும்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### 2015ஆம் ஆண்டிற்கான நடிகர் - நடிகையர்; தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான

# தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் - பரிசுகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இன்று வழங்குகிறார்!

*சென்னை, மார்ச் 6-*

தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு விருதுகள் - பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கிறார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு :-

தமிழ்நாடு அரசின் சார்பில் திரைப்பட விருதுகள் மற்றும் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா இன்று (6.3.2024 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், முத்தமிழ்ப் பேரவை, டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் சிறப்பாக நடைபெற உள்ளது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் விழாவிற்குத் தலைமையேற்று விருதாளர்களுக்குத் தங்கப்பதக்கம், சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்களுக்குக் காசோலை, நினைவுப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி விழாப் பேருரையாற்றுவார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்.

திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் பரிசு பெறும் 2015-ஆம் ஆண்டிற்குத் தேர்வு செய்யப்பட்ட சிறந்த திரைப்படங்கள், நடிகர் நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் விவரம் பின்வருமாறு:-

**தேர்வு செய்யப்பட்ட சிறந்த படங்கள்**

1. சிறந்த படம் முதல் பரிசு - தனி ஒருவன்
2. “சிறந்த படம் இரண்டாம் பரிசு - பசங்க 2
3. சிறந்த படம் மூன்றாம் பரிசு - பிரபா
4. சிறந்த படம் சிறப்புப் பரிசு - இறுதிச்சுற்று
5. பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்திரிக்கும் படம் (சிறப்புப் பரிசு) - 36 வயதினிலே

**தேர்வு செய்யப்பட்ட சிறந்த நடிகர் நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள்**

1. சிறந்த நடிகர் - ஆர். மாதவன் (இறுதிச்சுற்று)
2. சிறந்த நடிகை - ஜோதிகா (36 வயதினிலே)
3. சிறந்த நடிகர் சிறப்புப் பரிசு - கௌதம் கார்த்திக் (வை ராஜா வை)
4. சிறந்த நடிகை சிறப்புப் பரிசு - ரித்திகா சிங் (இறுதிச்சுற்று)
5. சிறந்த வில்லன் நடிகர் - அரவிந்த்சாமி (தனி ஒருவன்)
6. சிறந்த நகைச்சுவை நடிகர் - சிங்கம்புலி (அஞ்சுக்கு ஒண்ணு)
7. சிறந்த நகைச்சுவை நடிகை - தேவதர்ஷினி (திருட்டுக் கல்யாணம்/36 வயதினிலே)
8. சிறந்த குணச்சித்திர நடிகர் - தலைவாசல் விஜய் (அபூர்வ மகான்)
9. சிறந்த குணச்சித்திர நடிகை - கவுதமி (பாபநாசம்)
10. சிறந்த இயக்குநர் - சுதா கொங்கரா (இறுதிச் சுற்று)
11. சிறந்த கதையாசிரியர் - மோகன் ராஜா (தனி ஒருவன்)
12. சிறந்த உரையாடலாசிரியர் - இரா.சரவணன் (கத்துக்குட்டி)
13. சிறந்த இசையமைப்பாளர் - ஜிப்ரான் (உத்தம வில்லன்/ பாபநாசம்)
14. சிறந்தப் பாடலாசிரியர் - விவேக் (36 வயதினிலே),
15. சிறந்த பின்னணிப் பாடகர் - கானா பாலா (வை ராஜா வை)
16. சிறந்த பின்னணிப் பாடகி - கல்பனா ராகவேந்தர் (36 வயதினிலே)
17. சிறந்த ஒளிப்பதிவாளர் - ராம்ஜி (தனி ஒருவன்)
18. சிறந்த ஒலிப்பதிவாளர் - 1) ஏ.எல்.துக்காராம், 2) ஜெ.மஹேச்வரன் (தாக்க தாக்க)
19. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்) - கோபி கிருஷ்ணா (தனி ஒருவன்)
20. சிறந்த கலை இயக்குநர் (ஆர்ட் டைரக்டர்) - பிரபாகரன் (பசங்க 2)
21. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் - ரமேஷ் (உத்தம வில்லன்)
22. சிறந்த நடன ஆசிரியர் - பிருந்தா (தனி ஒருவன்)
23. சிறந்த ஒப்பனைக் கலைஞர் - சபரி கிரீஷன் (36 வயதினிலே/ இறுதிச் சுற்று)
24. சிறந்த தையற் கலைஞர் - வாசுகி பாஸ்கர் (மாயா)
25. சிறந்த குழந்தை நட்சத்திரம் - 1).மாஸ்டர் நிஷேஸ் 2).பேபி வைஷ்ணவி (பசங்க 2)
26. சிறந்த பின்னணிக் குரல் (ஆண்) - கௌதம் குமார் (36 வயதினிலே)
27. சிறந்த பின்னணிக் குரல் (பெண்) - ஆர்.உமா மகேஸ்வரி (இறுதிச்சுற்று)

**தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கான விருதுகள் 2014 – 2015**

1. சிறந்த இயக்குநர் - கே.மோகன்குமார் (புர்ரா)
2. சிறந்த ஒளிப்பதிவாளர் - விக்னேஷ் ராஜகோபாலன் (கண்ணா மூச்சாலே)
3. சிறந்த ஒலிப்பதிவாளர் - வி.சதிஷ் (கண்ணா மூச்சாலே)
4. சிறந்த படத்தொகுப்பாளர் - ஏ.முரளி (பறை)
5. சிறந்த படம் பதனிடுவர் - வி.சந்தோஷ்குமார் (கிளிக்)

தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் சிறந்த திரைப்படங்களின் தயாரிப்பாளர்கள், சிறந்த நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரித்த குறும்படங்களின் தொழில்நுட்பக் கலைஞர்கள் என மொத்தம் 39 விருதாளர்களுக்குக் காசோலையும், விருதாளர்களின் பெயர் பொறித்த தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், உயர் அலுவலர்கள், திரையுலகத்தைச் சார்ந்த பிரமுகர்கள், நடிகர், நடிகையர் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.




நெய்வேலி என்.எல்.சி. இந்தியா லிமிடெட் நிறுவனம் சார்பில், சி.எஸ்.ஆர் நிதியின் கீழ், திட்டக்குடி சட்ட மன்ற தொகுதியில் உள்ள 2000 கைம்பெண்களுக்கு ரூ. 2 கோடி மதிப்பீட்டில், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களை, தொழிலாளர் நலன் திறன்மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்.என்.எல்.சி இந்தியா நிறுவன தலைவர் பிரசன்னகுமார் மோட்டுப்பள்ளி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேஷ் உள்ளிட்ட என்.எல்.சி., இந்தியா லிட்., நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மதுரையில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் மாநில துணைச் செயலாளர் ரஃபி அகமது தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கு கூட்டத்தில் சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். இதில் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, சிறுபான்மை அணி நிர்வாகிகள் உஸ்மான் அலி, மீராஜான், மைதீன் பிச்சை, சேக் அப்துல்லா, தக்காளி ஹக்கீம், ஹேசர்கான், சாகுல், மொய்தீன் பாட்சா, டாக்டர் சுபேர்கான் மற்றும் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த திரளானோர் பங்கேற்றனர்.